[18th July 1957

MR. SPEAKER : வேண்டியதில்லை. ஸ்ரீ எம். கலியாணசுந்திரம் ஊரிலே இல்லை; வெளிநாட்டில் இருக்கிறார். ஸ்ரீ கலியாணசுந்திரம் பெயரிலோ அல்லது வேறு அங்கத்தினரின் பெயரிலோ இருக்கும் கேள்வியை மற்றொரு நண்பர் கேட்கலாம் என்று நான் உத்தரவு கொடுக்கிறேன். Yes, Mr. Vinayakam.

SRI K. VINAYAKAM : My point of order is on the same old point, Sir. The hon. Member Sri Kalyanasundaram has authorized me to put all the questions standing in his name and coming on the agenda.

THE HON. SRI C. SUBRAMANIAM : Even that is not necessary, Rule 34 (2) of the Assembly Rules reads "If on a question being called, a member in whose name it stands is absent, the Speaker at the request of any member may direct that the answer to it be given." Therefore, an authorization is not necessary. We have since changed the old rules.

Rajaji Sanatorium, Tiruchirappalli

* 136 *Q.*—SRI K. VINAYAKAM (on behalf of Sri M. Kalyanasundaram) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a deputation on behalf of the Rajaji Sanatorium, Tiruchirappalli, met the Hon. Minister on 14th August 1956 and made representations to him for enhancing the amount of grant; and

(*b*) the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Government sanctioned in January 1957 a maintenance grant of Rs. 17,400 for 1955–56 to the Rajaji Tuberculosis Sanatorium, Tiruchirappalli, in addition to the grant of Rs. 15,000 sanctioned earlier for that year.

SRI P. G. KARUTHIRUMAN : சபாநாயகர் அவர்களே, இந்த ஸானடோரியத்திற்கு கொடுக்கப்படுவது போன்று எல்லா ஸானடோரியங்களுக்கும் சலுகை கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த பிரச்னை இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. JAGANNATHAN : இந்த ராஜாஜி ஸானட்டோரியத்தை சர்க்கார் எற்று நடத்துவதற்கு முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அது எதற்காக என்று தெரியவில்லை. மற்றவர்கள் நடத்திக்கொண்டு வருகிறார்கள், அதற்காக சர்க்கார் உதவி செய்துக்கொண்டிருக்கிறார்கள்.

18th July 1957]

Wage Board for Press Workers

* 137 *Q.*—Sri M. P. SUBRAMANIAM (on behalf of Sri N. K. Palanisami): Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to constitute a Wage Board for the Press Workers ?

The Hon. Sri R. VENKATARAMAN : No, Sir.

Sri S. B. ADITYAN : அச்சுத் தொழிலாளர்களுக்கு "வேஜ் போர்டு" நியமிக்கப் போவதில்லை என்று சொன்னார்கள். அவ்விதம் இல்லை யென்றால் "வேஜ் போர்டு" ஆக்டின்படி குறைந்தபட்ச கூலியாவது நிர்ணயிக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அச்சுத் தொழிலாளர்களுக்கு சில "அட்ஜுடிகேஷன்" தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்பை எல்லா இடங்களிலும் அமல் செய்வார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது. அவ்விதம் இல்லையென்றால் குறைந்த பட்சக் கூலி நிர்ணயிக்க வேண்டுமென்று அதிகமான புகார்கள் வந்தால் சர்க்கார் அதைப்பற்றி யோசிக்கும்.

Sri V. K. KOTHANDARAMAN : அட்ஜுடிகேஷன் தீர்ப்பை சரியாக அமல் செய்யாமல் இருப்பதினால் இவர்களுக்கு விரைவில் ஒரு வேஜ் போர்டு ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : இல்லை.

Sri K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஓரளவு கல்வித்திறன் பெற்று திறமையோடு பணியாற்றவேண்டியிருக்கிற காரணத்தினாலும் அவர்கள் ஒரே இடத்தில் நிரந்தரமாக பணியாற்ற முடியாத நிலைக்கு அவர்களுக்கு கொடுக்கப்படும் ஊதியம் இருப்பதினாலும் அடிக்கடி வேறு இடங்களுக்கு மாறி செல்ல வேண்டிய நெருக்கடியான நிலை இருப்பதினாலும் இரவு நேரங்களில் கடுமையாக உழைக்க வேண்டியிருப்பதினாலும் இவ்விதமான துன்பமான நிலையில் இருக்கும் அவர்களுக்கு குறைந்த பட்ச சம்பளம் நிரந்தரமாக கிடைக்க சர்க்கார் எதாவது ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நான் ஆதித்தன் அவர்களின் கேள்விக்குப்பதில் சொன்னேன். கூடிய மட்டும் எல்லா முதலாளிகளும் அட்ஜுடிகேஷன் தீர்ப்புப்படி ஊதியம் கொடுப்பார்கள் என்று சர்க்கார் எதிர்பார்க்கிறது. இவ்விதம் கொடுக்கப்படவில்லை என்று தொழிலாளர்களிடமிருந்து அதிகப்படியான குறைகள் வரும்போது அந்த சமயத்தில் அதுப்பற்றி கவனிக்கப்படும்.

Sri P. S. CHINNADURAI : சபாநாயகர் அவர்களே, கோவை அச்சகத் தொழிலாளர்கள் சங்கத்திலிருந்து உடனடியாக இப்போது தொழிலாளர்கள் பெறுகிற சம்பளத்தோடு 25 சத விகிதம் அதிகரித்து கொடுக்கவேண்டுமென்றுள்ள கோரிக்கையை எல்லா அச்சக முதலாளிகளுக்கும், அதன் நகல் அரசாங்கத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்பட்ட கோரிக்கையின் மீது பரிசீலனை செய்து உடனடியாக அமைக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதை அமல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

The Hon. Sri R. VENKATARAMAN : சாதாரணமாக தனித்தனி இடங்களிலிருந்து பலவிதமான குறைகள் வந்துகொண்டிருக்கின்றன. அவை அட்ஜுடிகேஷனுக்கு விடப்படுகின்றன. மாகாண ரீதியாக குறைகள் இருக்குமானால் அதற்கு ஒரு முடிவு ஏற்படுத்த வேஜ் போர்டுக்கு அனுப்பப்படுகிறது. வேஜ் போர்டு செய்யும் முடிவு யாரையும் பாதிக்காது. இதனால் இதை உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் இஷ்டப்படவில்லை.